**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 557/2022**

Prosecution witness: **3**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெகதீஷ் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 24.04.2023

**முதல் விசாரணை**:

நான் தற்போது ரெட்டியார் சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்னர் கன்னிவாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக இருந்தபோது கடந்த 18.05.2013 அன்று மதியம் 3.00 . மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள் தகவல் கிடைத்ததாக கூறி தருமத்துப்பட்டி - கோம்பை சாலையில் பாறைகோட்டை மண் சாலையில் முட்டுக்கோம்பை பகுதியில் கஞ்சா இருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாக கூறியதன் பேரில் என்னையும் உதவி ஆய்வாளர் சண்முகம், சிறப்பு சார்பு ஆய்வாளர் கனராஜ் மற்றும் சுந்தரவடிவேல் மற்றும் தேவையான உபகரணங்களுடன் மற்றும் சாட்சிகளான ஜோதி மற்றும் தங்கராஜ் என்பவர்களையும் ஆய்வாளர் அழைத்துகொண்டு 4.00 மணியளவில் மேற்படி இடத்திற்கு சென்ற கண்காணித்துக்கொண்டிருந்தபோது ஆராக்கியம் என்ற தர்மராஜ் தோட்டத்தில் செட்டின் முன்பு சௌந்திரபாண்டி அவர் மனைவி பசுங்கிளி

மற்றும் ஆரோக்கியம் மகன் உதய குமார் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் எங்களை கண்டதும் சௌந்திரபாண்டியும் பசுங்கிளியும் தப்பி ஓடிவிட்டார்கள். கையில் பாலிதீன் கவருடன் நின்றிருந்த உதய குமாரை பெயர் விலாசம் விசாரிக்க அவர் தன் கையில் வைத்திருப்பது கஞ்சா என்றும் தப்பிஓடிய நபர்கள் அவரிடம் ஒரு நபரை அனுப்பி வைப்பதாகவும், அவர்கள் போன் மூலம் தகவல் தெரிவித்தால் அவர் கையில் வைத்திருக்கும் கஞ்சாவை அனுப்பி வைக்கும் நபரிடம் கொடுத்துவிடவேண்டும் என்றும் தனக்கு அறிவுறுத்தி இருந்ததாகவும் செட்டிற்குள் இரண்டு மூடை கஞ்சா இருப்பதாகவும் கூறினார். மேற்படி உதய குமாரை ஆய்வாளர் அவர்கள் சோதனை செய்ய வேண்டும் என்று கூறி சாட்சிகள் முன்னிலையில் சோதனை சம்மத கடிதம் பெற்றார். பின்னர் உதய குமார் அவர் கையில் வைத்திருந்த கஞ்சா பொட்டலத்தை ஆஜர் படுத்தினார். அதை ஆய்வாளர் வாங்கி பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது. அரசு அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக உதய குமாரை கைது செய்வதாக அறிவித்து ஆய்வாளர் 16.30 மணிக்கு கைது செய்தார். மேலும் காவல் ஆய்வாளர் உதய குமாரை விசாரித்தபோது அவர் தம்மிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையிலும் சாட்சிகள் முன்னிலையிலும் பதிவு செய்தார். அவர் கையில் இருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா பொட்டலத்தை எடை போட்ட போது அது சுமார் 2 கிலோ இருந்தது. அதில் மாதிரி மற்றும் பகுப்பாய்வுக்காகவும் தலா 100 கிராம் எடைகொண்ட இரண்டு பொட்டலங்களை எடுத்து நூலால் கட்டி SHO சீல் வைத்தோம். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறிய தகவலின் அடிப்படையில் செட்டிற்குள் இருந்த இரண்டு கஞ்சா மூடைகளை எடுத்து ஆஜர்படுத்தினார் . அது தலா 45 கிலோ எடை கொண்டதாக இருந்தது. அதில் இருந்தும் தலா 100 கிராம்

எடைகொண்ட இரண்டு பொட்டலங்களை எடுத்து நூலால் கட்டி SHO சீல் வைத்தோம் மீதம் இருந்த கஞ்சாவை அதே சாக்கில் கட்டி சீல் வைத்தார். பின்னர் பொருட்களை கைப்பற்றியதற்கு அத்தாட்சி தயாரித்தார். கைப்பற்றிய சொத்துக்கள் மற்றும் எதிரியையும் நிலையம் கொர்ண்டு வந்தோம். இதுசம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தன்று நான் நிலையத்தில் இருந்தபோது ஆய்வாளருக்கு தகவல் கிடைத்தது. மலையடிவாரத்தில் தோட்டத்தில் கஞ்சா வைத்திருப்பதாக ஆய்வாளருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் தான் சம்பவ இடம் சென்றோம். சம்பவ இடத்திற்கு சுமோ போலீஸ்வாகனத்தில் சென்றோம். நான் ஆய்வாளர் விசாரணையில் நாங்கள் சம்பவ இடத்திற்கு சுமோ வாகனத்தில் சென்றோம் என்று கூறவில்லை. சம்பவ இடத்திற்கு தனிநபர் சாட்சிகளை அழைத்து சென்றோம். சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். மலையடிவாரத்தின் எல்லை வரை சுமோ வாகனத்தில் செல்லமுடியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சுமார் 1 கிலோ மீட்டர் துாரம் நடந்து சென்றோம். 3 வது எதிரி செட்டில் நின்றுகொண்டிருந்தார். 3 ம் எதிரிக்கு வழங்கிய சோதனை சம்மத கடிதம், கைதுநமூனா மற்றும் அத்தாட்சியில் நான் கையொப்பம் இடவில்லை. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவை கைப்பற்றிய சான்றுப்பொருட்களின் மீது நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. நான் கூறுவதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் 3 ம் எதிரியை கைப்பற்றவில்லை என்றும் 3 ம் எதிரியிடம் இருந்து எந்த சான்றுப்பொருள்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் ஆவணங்கள் அனைத்தையும் நிலையத்தில் வைத்து தயாரித்துக்கொண்டு ள்ளோம் என்றால் சரியல்ல. சாட்சிகள் ஜோதி , தங்கராஜ்

எங்கள் நிலையத்தில் கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தை காட்டும் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை. நான் கூறுவதுபோல் சம்பவ இடமே இல்லை என்றும அதனால் தான் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி சௌந்திரபாண்டி ஓடிப்போனார் என்பதை நாங்கள் சுமார் 500 மீட்டர் துாரத்தில் பார்த்தோம். சௌந்திரபாண்டி என்பதை பின்னர் தெரிந்துகொண்டோம். ஆய்வாளர் விசாரித்தபோது தெரிந்துகொண்டோம். நான் கூறுவதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சௌந்திரபாண்டி அங்கு இல்லை என்றும அவர் தப்பி ஓடவில்லை என்றும் ஆய்வாளர் போட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக நான் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் சம்பவ இடத்தில் இருந்து சௌந்திரபாண்டி தப்பி ஓடியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் கஞ்சாவிற்கும் 1-3 எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போதைப்பொருள் விதிகளை முறையாக கையாள வில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவல் பற்றி எனக்கு நேரில் தெரியாது. மரம் செடிகொடிகள் 500 மீட்டர் தொலைவிற்குள்ளாக இருந்தது. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் கஞ்சாவிற்கும் 2 எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் நான் சம்பவ இடத்தில் 2ம் எதிரியை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போதைப்பொருள் விதிகளை முறையாக கையாள வில்லை என்றும் சொன்னால் சரியல்ல.